Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஆடி மீ 26 உ ஞாயிற்றுக்கிழமை (12-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 20 கதிர்: 162

# 45 அகதிகளுடன் சென்ற படகு தனுஷ்கோடியில் கவிழ்ந்தது!

## நேற்று மட்டும் 2,500 பேர் தமிழகம் சென்றனர்

சென்னை, ஆக. 12

நேற்று மட்டும் சுமார் 2 ஆயிரத்து 500 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களையும் சேர்த்து கடந்த ஜூன் 10ஆம் திகதிக்கு பின்னர் தமிழ்நாடு சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 67 ஆயிரத்தை தாண்டி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## கச்சதீவுக் கடலில் வைத்து இந்திய மீனவர் மீது சூடு!

சென்னை, ஆக. 12

கச்சதீவுக் கடலில் ஏழு படகுகளில் மீன்பிடித்து கொண்டிருந்த இந்திய மீனவர் மீது இலங்கைக் கடற் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் கடற் படையினர் பறித்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (உ-எ)

## பீரங்கிக் கப்பலிலிருந்து பாஷையூர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 12

குருநகர் கடற்பகுதியில் நிலை கொண்டிருந்த ஸ்ரீ லங்கா கடற்படையின் பீரங்கிக் கப்பல் ஒன்று நேற்றுக் காலை குருநகர், பாஷையூர், சிறுத்தீவு ஆகிய பகுதிகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியது. இதனால் பெண்மணி ஒருவர் காயமுற்றார்.

கடலில் தொலைவில் தரித்து நின்ற இந்தக் கப்பல், நேற்று கரைப்பகுதியை நோக்கி முன்னேறி, கரை (3 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கைதான 7 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஆக. 12

வவுனியா, பத்தாம் படிவம் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய இராணுவத்தினர் அங்கு பொதுமக்கள் எழுவரைக் கைதுசெய்தனர்.

அந்த எழுவரும் செட்டிகுளம் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அன்று மாலையே வெட்டிக் கொலை (3 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் 15 தமிழர்கள் அம்பாறையில் படுகொலை!

சென்னை, ஆக. 12

அம்பாறை மாவட்டத்தில் நேற்றுக்காலை பதினைந்து தமிழ்ப்பொதுமக்கள் ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழ் அமைப்பு ஒன்றின் பிரதிநிதி ஒருவர் இத்தகவலை நேற்றுக் கொழும்பில் வெளியிட்டதாக இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது. (உ-எ)

## விமானத் தாக்குதலின்போது சைக்கிள் 'சவாரி' சென்றது!

யாழ்ப்பாணம், ஆக., 12

விமானங்கள் வானத்தில் பறந்தால் யாழ் நகர மக்களுக்கு ஒரே கலக்கம், பயம், அச்சம். அவர்கள் பதுங்குகுழிக்குள் தஞ்சமடைந்து விடுவர்.

ஆனால் விமானங்கள் எப்போது வரும் என்று காத்திருக்கிறது ஒரு கோஷ்டி. விமானங்கள் வந்தால் அந்தக் கோஷ்டியினருக்கு ஒரே குஷி!

அந்தக் கோஷ்டியினர் எந்த வீடு கண்ணில் படுகிறதோ அங்கே புகுந்து விடுவார்கள். அங்கே கையில் [illegible] [3 ஆம் பக்கம் பார்க்க]

## ஐவர் மட்டுமே மீட்கப்பட்டனர் ஏனையோர் கதி தெரியவில்லை

சென்னை, ஆகஸ்ட் 12

நாற்பத்திஐந்து ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு சென்ற படகு ஒன்று தனுஷ்கோடி கரைக்குச் சற்று அப்பால் நடுக் கடலில் கவிழ்ந்து போய் விட்டதாக இராமேஸ்வரத்துக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படகில் வந்த அகதிகளில் ஐவர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டதாகவும், ஏனையோர் கதி தெரியவில்லை என்றும் இந்தியச் செய்திகள் தெரிவித்தன. (உ—எ)

## நகரில் நடந்த விமானத் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 12

யாழ்ப்பாண நகரத்தைப் பிடிக்கும் இராணுவ நடவடிக்கையின் நாளாந்த "ஒபரேஷன்" ஆகிய விமானத் தாக்குதல் நேற்றும் யாழ். நகரில் தப்பாது இடம்பெற்றது.

காலை 7-05 மணியளவில் வந்த இரண்டு பொம்மர் விமானங்கள் சுமார் 20 நிமிட நேரம் அங்கும் இங்குமாகப் பேரிரைச்சலுடன் பறந்து திரிந்து குண்டுகளைப் போட்டன.

அவ்வேளை அவற்றின் இலக்குகள் அனேகமாக கோட்டை முகாமை அண்டிய பகுதிகளாகவே இருந்தன. காலைத் தாக்குதலில் சிராம்பியடி ஒழுங்கைப் பகுதியிலும் ஒரு குண்டு வீசப்பட்டது.

பின்னர் மாலை 4 05 மணிக்கு வந்து நகரின் வானத்தில் நாசநர்த்தனம் புரிந்தன. ஒன்று மாறி ஒன்றாக அடுத்துத் தொடுத்துக் குண்டுகளைப் பொழிந்து தள்ளின.

விடுதலைப் புலிகளும் சும்மாயிருக்கவில்லை தரையில் இருந்து எதிர்த் தாக்கு (3-ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் ஆஸ்பத்திரி மீது நேற்றும் வான் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஆக. 12

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரி வளவுக்குள் நேற்று மாலையும் வானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று மாலை 5 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று இரண்டு "ரொக்கட்" குண்டுகளை மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குள் ஏவியது.

இந்தக் குண்டுகள் மானிப்பாய் ஆஸ்பத்திரி வளவுக்குள் – மருதடிப் பிள்ளையார் கோயில் பக்கமாக அமைந்திருக்கும் – டாக்டர்கள் விடுதி, செஞ்சிலுவைச் சங்க பணிமனை ஆகியவற்றுக்கு அருகில் விழுந்து வெடித்தன.

இந்தக் குண்டுகளினால் பெரும் சேதம் ஏற்படாவிட்டாலும் ஆஸ்பத்திரியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஆஸ்பத்திரியில் பணிபுரிந்து கொண்டிருந்த டாக்டர்களும், ஊழியர்களும் ரொக்கட் தாக்குதலை அடுத்து [3ஆம் பக்கம் பார்க்க]

## ஆஸ்பத்திரியைச் சுற்றி ஒன்பது இடங்களில் தீ!

யாழ்ப்பாணம், ஆக.12

மானிப்பாய் ஆஸ்பத்திரி வளவைச் சூழவுள்ள பகுதியில் 9 இடங்களில் நேற்று தீ மூட்டப்பட்டிருந்தது.

இந்த இடங்களில் டயர்களைப் போட்டு எரித்து தீ மூட்டிவிடப்பட்டிருந்தது.

இரவில் வானத்தில்பறக்கும் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றுக்கு ஆஸ்பத்திரிச் சுற்றாடலைத் தெளிவுபடுத்தவே இந்த ஏற்பாடு எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி மீண்டும் இயங்குவதற்கு படையினர் அனுமதி வழங்கியபோது இணக்கம் காணப்பட்ட ஏற்பாடுகளில் இரவில் ஆஸ்பத்திரி சுற்றாடலில் தீ மூட்டப்படுவதும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இணக்கத்தின் படி நேற்று ஒன்பது இடங்களில் தீ மூட்டப்பட்டிருந்தது.

இதே சமயம்–

நேற்று முதல் மானிப்பாயில் மீண்டும் இயங்கத் தொடங்கிய ஆஸ்பத்திரிப் பிரிவுக்கு, செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜெனரேட்டர் ஒன்றின் மூலம் இரவு நேரத்தில் மின்சாரம் வழங்கப்பட்டது. (உ-9)

★ யாழ். ஆஸ்பத்திரி விடயம்

## பேச்சு நடத்த ஐவர் குழு இன்று கொழும்பு செல்லும்

யாழ்ப்பாணம், ஆக. 12

யாழ். ஆஸ்பத்திரி விடயம் குறித்து பாதுகாப்புச் சபையுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஆறுபேர் கொண்ட குழு ஒன்று இன்று கொழும்பு புறப்படவிருப்பதாகத் தெரிவருகிறது.

[illegible] ஆஸ்பத்திரி பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி. பி. சண்முகம் இந்தக் குழுவுக்குத் தலைமை வகிப்பார்.

பருத்தித்துறைக்கு மாவை ஏற்றி வந்த 'சிகிரியா' கப்பல் அனேகமாக இன்று கொழும்புக்கு புறப்படும் என்றும்–

இந்தக் கப்பலிலேயே யாழ் ஆஸ்பத்திரி பிரதிநிதிகள் குழு [3ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை, [13993)

## இடமாற்றம்

டில்கா வாச் வேக்ஸ் (DILKA WATCH WORKS) ஸ்தாபனம் ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் அமைந்துள்ள தமிழ் பல்துறை சேவை ஸ்தாபனத்தில் நடைபெறுகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். (14006)

## இன்னும் இல்லை

கிளிநொச்சி, ஆக. 12

கிளிநொச்சி மாவட்ட ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இதுவரை கிடைக்கவில்லை. (இ - 76)

## இந்தியாவுக்கு

சாவகச்சேரி, ஆக' 12

மட்டுவில் மகாவித்தியாலயத்தில் உள்ள திருமலை அகதிகளில் சிலர் இந்தியா சென்றனர் [இ-31]

## பிரார்த்தனை

கொழும்புத்துறை, ஆக. 12

தமிழீழ விடுதலைப் புலிகளின் மண்மீட்புப் போராட்டம் வெற்றி பெறவும் நாட்டில் அமைதி, சுபீட்சம், சமாதானம் நிலவவும் வேண்டி தொல்புரம் மத்தி கொட்டடிப்பதி அருள்மிகு ஆதி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூர உற்சவ தினத்தன்று விசேஷ அபிஷேகம், பூசைஆராதனைகளும், கூட்டுப்பிரார்த்தனைகளும் நடைபெற்றன. (இ - 30)

# முதலாம் வருட நினைவஞ்சலி

அமரர்
சுப்பையா
கனகசுந்தரம்
(தலைவர்)

தோற்றம்:
11 - 03 - 1932

மறைவு:
25 - 07 - 1989

திதி: 13 - 08 - 1990
(திங்கள்)

அன்பிலும் பண்பிலும் வழிகாட்டியாய் நின்று, பல சமூக சேவைகளைச் செய்து எம்மையெல்லாம் ஆறாத் துயரில் தத்தளிக்க விட்டு விட்டு விண்ணுலகஞ் சென்று ஓராண்டு சென்றாலும் எம் இதயங்களை விட்டகலாத உங்கள் நினைவால் வாடும்:

மனைவி,
உற்றார்,
உறவினர்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
[சி-5163]

# இடமாற்றம்

## மேர்வின்ஸ் (MERWIYNS)

91/1, மின்சார நிலைய வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் 39, புதுச் செம்மணி றோட், நல்லூர் வடக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(13991)

# பச்சிலைப்பள்ளி பிரதேச அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்

பளை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அகதிகள் புனர்வாழ்வுக்கெனவும், அவர்களைப் பராமரிக்கவெனவும் மேற்படி பெயரில் ஒரு புனர்வாழ்வுக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது என்பதை சகல பொதுமக்களுக்கும், உதவி வழங்கும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கட்கும் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது கழகத்தின் செயற்பாட்டிற்கென நிதி, பொருள், சேவை ஆகிய உதவிகளை எமக்கு வழங்கி உதவி புரியுமாறு அன்பான வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஏ. பி. ஜோர்ஜ்
செயலாளர்

தலைவர் கிளிநொச்சி மாவட்ட
கூட்டுறவுச் சபை, பச்சிலைப்பள்ளி
ப. நோ. கூ. சங்கம்.

(C/5161)

# கண்ணீர் அஞ்சலி

05 - 08 - 1990 ஞாயிற்றுக்கிழமை யாழ். கோட்டை தாக்குதலில் களத்தில் வீரமரணமடைந்த

27 வீரவேங்கைகளுக்கும்,

இருபாலையைச் சேர்ந்த

## வீரவேங்கை டயஸ்

செல்வராசா இராஜேந்திரகுமார் (பாபு)
அவர்களுக்கும்

எமது கண்ணீர் அஞ்சலியை
செலுத்துகின்றோம்.

சிற்றூர் அவை
இருபாலை கிழக்கு, இருபாலை.

[14022]

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## S. K. L. கொன்ஸ்ரன்ரைன்

தோற்றம்: 22 - 01 - 1933

மறைவு: 12 - 08 - 1989

மாதங்கள் உருண்டோடி
வருடமாய் மாறினும்
மாறாதே எம் சோகம்
உங்களை விட்டென்றுமே

'மரணத்தால் உங்களை மாத்திடினும்
சோகத்தால் எம்மை வருத்திடினும்
கண்ணீரால் எம்மை கரைத்திடினும்
அன்பினால் உங்களை பார்க்கமுடியவில்லையே
அவனுக்கு!!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்.

27/2 குருசோ வீதி,
யாழ்ப்பாணம், [13603]

# வலிமேற்கில் விவசாய உற்பத்திக் குழுக்கள்

வலி-மேற்கு சிற்றூர் அவைப் பிரிவுகள் தோறும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் விவசாய உற்பத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் உற்பத்திக்கு உகந்த திட்டங்களை தமிழீழ ஆய்வு நிறுவனம் தயாரித்து வருகிறது.

குறிப்பாக வலி - மேற்கு தெங்கு பனம்பொருள் அபிவிருத்திச் சங்கத்தினூடாக சீனி உற்பத்திக்குவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் முயற்சி எடுத்துவருகிறது. [இ-161]

# தசாக கிருகயக்ஞ அழைப்பிதழ்

அன்புடையீர்!

ஆடிமாதம் 19ஆம் நாள் (4 - 8 - 1990) சனிக்கிழமை சிவபதம் எய்திய எங்கள் தந்தையார் இரத்தின ஐயர் அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் எதிர்வரும் 13, 14, 15ம் திகதிகளில் நடைபெற்று 16 - 8 - 90 வியாழக்கிழமை கிருகயக்ஞமும் நடைபெறும். தனித்தனியாக அறிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம். தயவு செய்து யாவரும் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
புளியங்கூடல் மனைவி, மக்கள்

(14012)

# இடமாற்றம்

## ★ மண்டேலா ரேடர் ★

இல. 02, பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் இயங்கி வந்த எமது புத்தகசாலை தற்போதைய நாட்டின் நிலை காரணமாக கீழ் காணும் முகவரியில் 01 - 08 - 1990 தொடக்கம் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

மண்டேலா ரேடர்,
(புத்தகசாலை)
550/8A, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

[14021]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலுதலும்

மண்ணுலகில்:
14 - 11 - 1921

விண்ணுலகில்:
13 - 07 - 1990



## திருமதி நல்லம்மா சின்னத்தம்பி

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மையெல்லாம் வாழ்வித்த குலவிளக்கு திருமதி நல்லம்மா சின்னத்தம்பி அவர்கள் 13 - 07 - 1990 இல் இவ்வுலக வாழ்வை நீத்து இறையடி சேர்ந்த வேளையில் பிரிவுத் துயராற்றாது கலங்கி நின்ற எங்களது துயரிற் பங்கு கொண்டு ஆறுதல் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன், தனித்தனியாக நன்றி தெரிவிக்க இயலாமைக்கு மிகவும் வருந்துகின்றோம்.

இன்று எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக்கான வீட்டுக் கிருத்திய நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.

திருமகள் வாசம்.
புங்குடுதீவு - 3 (14020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 மாதங்கள் பூர்த்தியான நிலையில் யுத்தம்; இன்னும் எத்தனை காலத்துக்கு தொடரும்?

அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டை மூண்டு இரண்டு மாதங்கள் பூர்த்தியாகிவிட்டன. நேற்று மூன்றாவது மாதம் ஆரம்பமாகியது.

மட்டக்களப்பில் ஆரம்பித்த சண்டை யுத்தமாக மாறி இப்போது பெரும் போராக நடந்து கொண்டிருக்கிறது.

மட்டக்களப்பைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரைச் சிங்களவர் ஒருவர் தாக்கினார். தாக்குதலுக்கு ஆளான முஸ்லிம் மட்டக்களப்புப் பொலீஸில் முறைப்பாடு செய்வதற்குச் சென்றார். அப்படி ஒரு முறைப்பாட்டைப் பதிய முடியாது என்று கூறி, பொலீஸார் அவரைத் திருப்பி அனுப்பி விட்டனர்.

முஸ்லிம் நபரின் முறைப்பாடு ஏன் பதியப்படவில்லை என்று விசாரிப்பதற்காகச் சென்ற விடுதலைப் புலிகள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அந்த நிமிடத்திலிருந்து, சுமார் பதினைந்து மாதங்களாக அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிலவிய நட்பு திடீரென முறிந்தது. ஒருவர் மீது அடுத்தவர் கொண்டிருந்த தாகக் கூறப்பட்ட நம்பிக்கை சிதறியது.

பொலீஸாரின் துப்பாக்கியிலிருந்து வெளியேறிய ரவைகள் வடக்கு-கிழக்கில் நிலவிய அமைதியைக் குத்திக் குலைத்தன.

இது நடந்தது ஜூன் மாதம் 11 ஆம் திகதி. அன்றிலிருந்து கிழக்குக் குழம்பியது. அங்குள்ள பொலீஸ் நிலையங்களை விடுதலைப் புலிகள் முற்றுகை இடத் தொடங்கினர்.

அரசு - புலிகள் பேச்சுத் தொடரில் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து பேச இருந்த அமைச்சர் ஹமீதின் விஜயம் திட்டமிட்டபடி நடந்தது.

அதன் விளைவாக ஒருயுத்த நிறுத்தம் வந்தாலும் அது சரிவரக் கடைப்பிடிக்கப்படவில்லை. அதனால் அமைச்சர் ஹமீத் மீண்டும் ஜூன் 16 ஆம் திகதி படை அதிகாரிகளையும் கூட்டி வந்து பேசினார்.

### யுத்த நிறுத்தம் நிலைக்கவில்லை

அப்போதும் யுத்த நிறுத்தத்துக்கு இணங்கப்பட்டது. ஆனால் மீறல்கள் தொடர்ந்ததால் யுத்த நிறுத்தம் நிலைக்கவில்லை.

அரச படைகள் கிழக்கின் பல இடங்களிலும் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களில் ஈடுபட்டிருந்த போதிலும், புலிகளே மீறுவதாகச் சொல்லி, அரசாங்கம் 18 ஆம் திகதி யுத்தத்தை உத்தியோக

செய்திக் கட்டுரை

பூர்வமாகப் பிரகடனம் செய்தது, அதைத் தொடர்ந்து பெருமளவில் மூண்ட யுத்தம் தொடர்கிறது. நாளாந்தம் தீவிரமடைந்து வருகிறது.

இரண்டு தேசங்களுக்கு இடையே நடப்பதுபோல, இரண்டு மாதங்களுக்கு மேலாக யுத்தம் நீடிக்கிறது. அரசு தனது ஆயுத, ஆளணிப் பலங்களை அதிகரித்த போதிலும் — முப்படைகளின் முழுப்பலத்தைத் திரட்டிய போதிலும்— போரில்வெல்லமுடியவில்லை.

விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் அதிகமானதா அல்லது அரசாங்கத்தின், அரச படைகளின் பலம் கூடியதா என்று அனுபவமும் தேர்ச்சியும் உள்ள இராணுவ நிபுணர்களால் தான் கூறமுடியும்.

ஆனால் அரசாங்கப் படைகளின் மனோபலத்தைவிட விடுதலைப் புலிகளின் மனோபலம் அதிகம் என்பதை எல்லோருமே அறிவார்கள்.

கடைசிப் புலியையும் அழித்த பின்னர்தான் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படும் என அமைச்சர் ரஞ்சன் ஆகப்பிந்தித் தெரிவித்திருக்கிறார். எல்லோரும் அறிந்த, உலகமே புரிந்த புலிகளின் மனோபலத்தை, தியாக உணர்வை அவர் அறிந்துகொள்ளவில்லை என்பது அதன் அர்த்தம்.

### அறிகுறி இல்லை

யுத்தம் நிறுத்தப்படுவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்பட்டால் அது தற்போது சிதறி இருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீண்டும் ஒன்று சேர இடமளிப்பதாகிவிடும் என்று இராணுவத் தரப்பில் கூறப்படுகிறதாம்.

இது இப்படியிருக்க —

விடுதலைப் புலிகள் மீது போர் நடத்துவதாகக் கூறி, அரசாங்கம் தமிழ் மக்களையே அழித்து வருகிறது. அரச படைகளின் இராணுவத் தாக்குதலில் இறந்த புலிகள் போராளிகளைவிட, தமிழ்ப் பொதுமக்கள் பல மடங்கினர் என்பது தெட்டத் தெளிவான புள்ளிவிவரம்.

முப்படையினரும் நடத்தும் தாக்குதல்களால் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் இறந்ததோடு தமிழ்ப் பகுதிகளும் அழிக்கப்பட்டுள்ளன. சீனச் ''சகடை'' விமானம் போடும் 300 கிலோ எடையுள்ள குண்டு ஒன்று அது விழும் பகுதியில்உள்ள பத்துப் பதினைந்து கட்டடங்களை நொடிப் பொழுதில் தகர்த்து எறிகிறது!

இந்த அழிவுகளுடன் உணவுப் பொருள் இல்லாமையாலும் தமிழர்கள் பட்டினிச் சாவையும் எதிர்நோக்குகிறார்கள். நோய்க்கு மருந்தில்லாமல் ஒரு சாரார் மடிகிறார்கள். உளவளம் பாதிக்கப்பட்டுப் பலர் உடல் நலிகிறார்கள்.

இந்த ஆபத்துக்களிலிருந்து தப்புவதற்காக ஈழத்தமிழர்கள் பலரும் தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்கிறார்கள்.

உரிமை கேட்டுப் போராடுவதற்காக ஈழத் தமிழர்கள் மீது வஞ்சம் தீர்க்கப்படுகிறது; அவர்கள் அழிக்கப்படுகிறார்கள்; அவர்களின் உரிமைகள் நாசமாக்கப்படுகின்றன; ஆலயங்களும், தேவாலயங்களும் சேசுமாக்கப்படுகின்றன.

### இலகு திட்டம்—1

இவற்றை எல்லாம் தெரிந்

சாமானியன்

தும் தெரியாதது போல உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஏன் சொந்தத் தமிழகமே தமிழர்கள் அங்கு அகதிகளாகச் செல்லாமல் தடுக்க முனைகிறது. இலங்கையில் அகதிமுகாம் ஒன்றை நிறுவி தமிழர்களைப் பலி கடாக்களாக்க விரும்புகிறது; எலிக்குக் காவலாகப் பூனையை அமர்த்துவது குறித்து ஆராய்வதில் தனது நேரத்தைச் செலவிடுகிறது. அதற்குப் பதில் தமிழகமும் இந்தியாவும் ஆக்கபூர்வமாக எதனையும் சிந்திப்பது நல்லது!

ஈழ தமிழினமும் அதன் தாய் மண்ணும் நாளாந்தம் அழிக்கப்பட்டு உருக்குலைக்கப்படுகின்றன.

இதே வேளை வடக்கு-கிழக்கில் வாழும் தமிழர்களை முஸ்லிம்களைக் கொண்டே அழிக்கும் ஒரு திட்டத்தையும் அரசு புதிதாக ஆரம்பித்திருக்கிறது. இரு சிறுபான்மை இனங்களும் மோதுண்டு அழிந்து போனால் முழு நாட்டையும் சிங்களத் தேசமாக்குவது இலகுவாகிவிடும் என்ற எண்ணத்தில் வளர்ந்தது அந்தத் திட்டம்.

கிழக்கு அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் வந்ததாகக் கூறப்பட்டாலும் அது உண்மையில்லை; நகரங்களை மட்டுமே படைகள் கைப்பற்றி இருக்கின்றன என்று நேரில் சென்று பார்த்த வெளிநாட்டுச் செய்தி ஏஜன்சி முகவர்கள் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர்.

### இலகு திட்டம்—2

இந்த நிலையில் வடக்கைப் பிடிக்க வாய்ப்பு ஒன்றை ஏற்படுத்தவும் அரசிடம் புதுத் திட்டம் உண்டு என அமைச்சர் ரஞ்சன் அறிவித்திருக்கிறார்.

வடக்கில் வாழும் பத்து லட்சம் மக்களையும் தென்னிலங்கைக்கு (அகதிகளாக?) அழைத்து முகாம்களில் தங்க வைத்துவிட்டு புலிகளுடன் இங்கு போராடப் போகிறார்களாம்!

இதுவும் பாலுக்குக் காவலாகப் பூனையை அமர்த்தும் வேலைதான். வடக்கு-கிழக்கை வெறுமைப்படுத்தி, தமிழர்களைத் தென்னிலங்கையில் குண்டர்களின் பெயரைச்சொல்லி தீர்த்துக் கட்டிவிட்டால், இங்கு சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றுவது இலகுவாக இருக்கும் என்ற கணக்குத் தான் புதிய திட்டம்,

இந்த வகையுத்தம் — கொடூர இன ஒழிப்பு— இன்னும் எத்தனை நாட்களுக்குத் தொடரும்? ★

## இந்தியா 432 ஓட்டங்கள்

மான்செஸ்டரில் நடைபெறும் - இங்கிலாந்துக்கு எதிரான - இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டின் மூன்றாம் நாளான நேற்று ஆட்டம் முடிவடைந்தபோது இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 432 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 519 ஓட்டங்களை எடுத்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது என்பது தெரிந்ததே. (உ-எ)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## முருகையா! கதியினி நீயையா!!

ராகம்: ஹிந்தோளம் தாளம்: ஆதி

பல்லவி

கதிர்வடி வேலையா கதியெனக் கேதையா - நல்லைப்
பதிவளர் முருகையா கதியினி நீயையா!
[கதிர்...]

அனுபல்லவி

சற்குரு உனையென்றே சங்கரன் உவந்தேற்கச்
சொற்பொரு ளதைச்சொன்ன நற்குரு குமரையா!
[கதிர்...]

சரணம்

நினைப்பதுன் உருவெங்கும்! நிலைபதுன் திருவையா!!
முனைப்பதுன் அருளென்றும்! திளைப்பதுன் அழகையா!!
இணைப்பதுன் அன்பென்றும்! இனிப்பதுன் புகழையா!!
அணைப்பதுன் செயலெங்கும்! அனைத்துமுன்
அருளையா!!
[கதிர்...]

— ச. முருகையா

[ நல்லூர் கந்தசுவாமி ஆலய 17 ஆம் திருவிழா]

## பேச்சு நடத்த---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பு செல்லும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

கொழும்பில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க பிரதிநிதிகளுடன் சேர்ந்து பாதுகாப்புச் சபை உறுப்பினர்களை இவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அனேகமாக நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இந்தச் சந்திப்பு இடம் பெறும். (உ-9)

## பீரங்கி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

யை அண்மித்து நின்று, தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்டது.

பீரங்கிக் குண்டுகள் நெருப்புக் கோளங்களாக கரையை நோக்கி வருவதைக் கண்ட பொதுமக்கள் கிலி கொண்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினார்கள்.

இந்தத் தாக்குதலினால் சில வீடுகள் மற்றும் இயந்திரப் படகுகள் சேதமுற்றன.

இந்தத் தாக்குதல்களை அடுத்து பாஷையூர், கொழும்புத்துறை, துண்டி, குருநகர் பகுதி கரையோர மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்தனர். (உ-51-3-10)

## வவுனியா...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்யப்பட்டு, சடலங்கள் முகாமுக்கு வெளியே வீசப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கொல்லப்பட்டோர் விவரம் வருமாறு:

வி. யேசுதாசன் (வயது46)- சுடரிக்குளம், செட்டிகுளம், இ. கண்ணன் (வயது 18)- பயரிக்குளம், செட்டிகுளம், இ. சந்திரன் (வயது 21) பயரிக்குளம், இ. சின்னத்தம்பி (வயது 20) - 90ஆம் யூனிற் - செட்டிகுளம், உதயன் (வயது 19] - 9ஆம் யூனிற், சீலன் (வயது 18) - பெரிய குளம், சத்தியா (வயது 45)- பெரியகுளம்; [ஓ-5]

## மானிப்பாய் ---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரியை விட்டு பதறியடித்துக் கொண்டு வெளியேறினர்.

இந்தச் சம்பவம் குறித்து போதனா ஆஸ்பத்திரியில் இயங்கி வரும் செஞ்சிலுவைச் சங்க பணிமனை அதிகாரிகள், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுப் பிரதிநிதிகளுக்கு உடனடியாக அறிவித்தனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் இது பற்றி இராணுவ படை. அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டதாகவும்—

அப்போது இத்தகைய சம்பவங்கள் மீள இடம் பெறாது என அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது, (உ-9)

## விமானத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் அவர்களுக்குச் சொந்தமாகிவிடும்.

இப்படியான பல சம்பவங்கள் யாழ் நகரப் பகுதியில் தினசரி நடந்து வருகின்றன. பலர் பெறுமதியான பொருள்களை தாரை வார்த்து விட்டனர்.

நேற்று மாலை விமானங்கள் மற்றும் ஹெலி போன்றவை தாக்குதல் நடத்தின. இந்த சமயம் நல்லூர் அரசடி வீதியிலுள்ள ஒரு வீட்டில் முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'லேடீஸ்' சைக்கிள் 'சவாரி' சென்று விட்டது! கையாடப்பட்டுவிட்டது.!! (ஓ)

## நகரில் ---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தல்களை நடத்தினர்.

அந்த எதிர்த் தாக்குதல்களின் விளைவாக குண்டுகளைப் பொழிவதற்காகக் கீழே குத்திப் பதிந்த பொம்மர்கள், தமது வேலையைச் செய்ய முடியாமல், நிலைமையைச் சுதாகரித்துச் சமாளித்துக் கொண்டு மேல் எழுந்து சென்றதை இரண்டு மூன்று தடவைகள் காண முடிந்தது.

எனினும் அவை போராளிகளின் இலக்குகளுக்கு என்று வீசிய குண்டுகள் குறி தவறி விழுந்ததால் நாவலர் வீதி— அன்னசத்திர' ஒழுங்கைச் சந்தியில் உள்ள நான்கு ஐந்து வீடுகள் சேதமடைந்தன.

நேற்று மாலை குண்டு வீச்சினால் ஸ்ரீதர் தியேட்டர் பகுதியிலும் சில கட்டடங்கள் சேதமடைந்தன.

நான்கு பொம்மர்களும் தங்கள் ஆட்டத்தை முடித்துக்கொண்டு மாலை 5-15 மணிக்குத் திரும்பின. இடையில் ஒரு ஹெலியும் வந்து தனது சூரத்தனத்தைக் காட்டியது

அப்போது நல்லூர் செட்டித் தெருவுக்கும் குறுக்கு வீதிக்கும் இடையில் உள்ள தமது வீட்டில் நின்ற திருமதி வீரசிங்கம் என்பவர் காயமுற்றார்.

மீண்டும் மாலை 5-45 மணிக்கு இரண்டு பொம்மர்கள் வந்து இருபத்தைந்து நிமிட நேரமாக மீண்டும் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் குண்டுகளைப் பொழிந்து சென்றன. ஒரு பொம்மர் இறுதிக் கட்டத்தில் இருபாலை—கோப்பாய் பகுதியில் குத்திப் பதிந்து சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் ஆஸ்பத்திரி மீண்டும் இயங்குகிறது!

யாழ்ப்பாணம், ஆக. 12 மானிப்பாயில் மீண்டும் போதனா வைத்தியசாலை நேற்று முதல் இயங்கத் தொடங்கியது.

மிகக் குறைந்த அளவிலான நோயாளர்கள் சிகிச்சைபெற வந்திருந்தனர்.

வேறு வைத்தியசாலைகளில் இருந்தும் மானிப்பாய்க்கு நோயாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

மானிப்பாயில் இயங்கி வந்த யாழ் போதனா வைத்தியசாலை மீது கடந்த 7ஆம் திகதி விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது தெரிந்ததே. [ஒ-10]

# சோதனையின் பின்னரே நோயாளர்கள் அனுமதி

யாழ்ப்பாணம், ஆக. 12 மானிப்பாய் ஆஸ்பத்திரியின முக்கிய இடங்களில் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் இரவு பகலாக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்களின் சோதனையின் பின்னரே நோயாளர்களும், நோயாளர்களை பார்வையிட வருபவர்களும் ஆஸ்பத்திரியின் உள்ளேஅனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலகம் ஒன்றும் ஆஸ்பத்திரி வளவிற்குள் இயங்கும்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவந்தது. (ஒ-10)

# கூரையில் செஞ்சிலுவை குறிகள்

மானிப்பாய் ஆஸ்பத்திரிக் கட்டடங்களின் கூரைகளில் செஞ்சிலுவைக் குறிகள் மிகப் பெரிய அளவில் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரியின் முக்கிய இடங்களிலும் செஞ்சிலுவைச் சங்கக் கொடிகள் பறக்கவிடப்படவுள்ளன.

ஆஸ்பத்திரியின் முன் வீதியால் வாகனங்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்றும், வாகனங்கள் ஆஸ்பத்திரியின் பின் வீதி வழியாகச் செல்ல அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்பத்திரி வளவுக்குள் தனியார் வாகனங்கள் நிறுத்தப்படுவதும் முற்றாகத் தடுக்கப்படும். (ஒ-10)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை சுரேந்திரன்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும், வாரிவளவை வசிப்பிடமாகவும், அட்டாளைச்சேனைத் தபாலதிபருமாகிய செல்லத்துரை சுரேந்திரன் 6. 8 90 திங்கட்கிழமை அட்டாளைச்சேனையில் அகாலமரணமானார். அன்னார் காலஞ்சென்ற R. K. செல்லத்துரை, சரஸ்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், சாந்தினி, சுகுமாரன், அமரகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவபாலனின் மாமனாரும், நல்லதம்பி, நல்லம்மா ஆகியோரின் மருமகனும். இராஜேந்திரன், நாகேஸ்வரி, கணேசமூர்த்தி, பராசக்தி, ஞானேந்திரன், ரவீந்திரன் ஆகியோரின் சகோதரரும், பரமசிவம், நமசிவாயம், ஆறுமுகம், பரமேஸ்வரி, சிவஞானம், தவமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்; சு. சுகுமாரன் (மகன்)

வாரிவளவு,
காரைநகர், (14025)

## செல்வி திலகவதி ராஜகோபால்

13/2 தலையாழி ஒழுங்கை இராமனாதன் வீதி, கலட்டி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் எழுதுவினையராகப் பணிபுரிபவருமான செல்வி திலகவதி ராஜகோபால் 11-08-1990 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. ராஜகோபால், ராஜகோபால் பராசக்தி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சோமாவதி, சத்தியவதி, சுகுணவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி இராசம்மா சபாபதிப்பிள்ளையின் பேத்தியும், சு. சதானந்தன், க. சபாபதிப்பிள்ளை (ஒய்வு பெற்ற வருமானவரி உத்தியோகத்தர்), க. கருணாநிதி (லங்கா சீமெந்து லிமிட்டெட்) ஆகியோரின் மைத்துனியும் சிவகாந்தன், பிரியகாந்தினி ஆகியோரின் அன்புச் சித்தியும் தேனுகா, கோணேஸ், தேனுஷா ஆகியோரின் சின்ன அன்ராவும், ச. வர்ணகுலசிங்கம் (ஓய்வு பெற்ற கணக்காளர்), ச. குலராசசிங்கம் (ஆசிரியர் வசாவிளான் மகா வித்தியாலயம்), Dr. ச. குலத்துங்கம் (அமெரிக்கா) ஆகியோரின் மருமகளும், திரு. திருமதி படிகலிங்கம் சறோஜினிதேவி (ஓய்புபெற்ற ஆசிரியை) அவர்களின் பெறா மகளும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 12 - 08 - 1990 ஞாயிறு மு. ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இ. பராசக்தி [தாயார்]

தலையாளி ஒழுங்கை,
கலட்டி. (14026)

# சுடாநாட்டை விட்டு 10லட்சம் பேரை வெளியேற்ற அரசாங்கம் முயற்சி!

## அமைச்சர் ரஞ்சன் வெளியிடும் புதிய திட்டம்

கொழும்பு, ஆக. 12 விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசுப்படைகள் பெரும் எடுப்பிலான தாக்குதலைத் தொடுப்பதற்கு முன்னால், யாழ்ப்பாணம் தீபகற்பத்தில் இருந்து சுமார் பத்துலட்சம் தமிழ்மக்களை வெளியேற்றி வேறு இடங்களுக்கு அனுப்ப இலங்கை அரசு உத்தேசித்துள்ளது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இதனைக் கடந்த வெள்ளி மாலை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இத் திட்டம் தற்போது ஜனாதிபதி பிரேமதாஸாவின் பரிசீலனையில் இருப்பதாகவும் -

பொதுமக்கள்உயிரிழப்பைத் தடுக்கும் நோக்கத்துடன் அவர்களைத் தென்பகுதியில் பெரியமுகாம்களில் தங்கவைக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

வவுனியாவில் அமைக்கப்படும் முகாமில் யாழ் தீபகற்பத்தில் இருந்து வெளியேற்றப்படும் தமிழ்மக்கள் தங்கவைக்கப்படுவார்கள் என்றும் அவர் சொன்னார்.

எவ்வளவுபேர் இப்படித் தங்கவைக்கப்படுவார்கள் என்பதுபற்றியோ, எப்போது வெளியேற்றும் வேலைகள் ஆரம்பமாகும் என்ற விவரங்களையோ அமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளியிடவில்லை என்று தெரிவிக்கப்பட்து. [உ-எ]

# நாளை தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 12 கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட கடிதங்கள் நாளை திங்கட்கிழமை யாழ். நகர்ப் பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜூன் மாதம் 14ஆம் திகதி முதல் கொழும்பில் தேங்கிக் கிடந்த 295 தபால் பொதிகள் கடந்த 4ஆம் திகதி கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டன.

கொழும்பில் இருந்து வந்து சேர்ந்த 295 பொதிகளில், 191 பொதிகள் மாவட்டத்தில் உள்ள மற்றைய தபால் நிலையங்களுக்கு பெயர் குறிப்பிடப்பட்டு வந்தன. அவை உடனடியாகவே அந்தந்த தபால் நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

மீதியான 104 பொதிகளும் பொதுவாக வந்தவை.

அவை யாழ். பிரதம தபாலகத்தில் வைத்து நேற்றும் நேற்று முன்தினமும் தரம் பிரிக்கப்பட்டன. [உ-3]

# பஸ் சேவை இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஆக.12 வெளியிடங்களுக்கான பஸ் சேவைகள் நேற்று இடை நிறுத்தப் பட்டதாக மினி பஸ் சங்கத்தினர் தெரிவித்தனர்.

போக்குவரத்து பிரிவினரின் ஆலோசனைப்படி சேவைகள் இடைநிறுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (உ-3-9)

# தபால்களை அனுப்ப முயற்சி

யாழ்ப்பாணம், ஆக. 12 இங்கு சேகரிக்கப்பட்டிருக்கும் தபால்களை- பருத்தித்துறைக்கு இன்று வந்து சேர இருக்கும் கப்பல் மூலம் இங்கிருந்து அனுப்ப முயற்சி மேற்கொள்ளபபட்டுள்ளது,

தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் இத் தகவலை தெரிவித்தார். (உ-3)

# ஹெலி தாக்கி வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 12 இறுப்பிட்டியில் இருந்து அராலி நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் மீது ஹெலிக்கொப்டரிலிருந்து பேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் வயோதிபர் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை புங்குடுதீவு - மடத்துவெளிப் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றது.

நாகமுத்து வைரவன் (வயது 70) என்ற வயோதிபரே இச் சம்பவத்தில் காயமடைந்தார். (உ-10)

# ஜெயலலிதா பலம் மேலும் குறைகிறது

சென்னை ஆக. 12 ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. அணியில் இருந்து பிரிந்து மேலும் ஒரு எம், எல். ஏ. திருநாவுக்கரசு தலைமையிலான அ. தி. மு. க. அணியில் நேற்றுச் சேர்ந்தார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த வால்பாறைத் தொகுதி எம். எல். ஏ. யான திருமதி பி. லட்சுமி என்பவரே அவர்.

அவரையும் [illegible] [illegible] சட்டசபைப் பலம் ஏழாக அதிகரித்து விட்டது. [உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## குமாரசிங்கம் சின்னத்தங்கம்

30, சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த குமாரசிங்கம் சின்னத்தங்கம் அவர்கள் 11-8-90 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் குமாரசிங்கத்தின் (செட்டியார்) அன்பு மனைவியும், நித்தியானந்தராஜா, பரமானந்தன் (சதா), முருகானந்தன், புஸ்பராணி, தவராணி, விஜயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், ருக்மணி, பாலச்சந்திரன் (மைலன் பேக்கரி பருத்தித்துறை), புவனராணி, ஸ்ரீதரன், ஜெயகுமார் (சிவன் ஸ்ரோர் (Campus சந்தி) ஆகியோரின் அன்பு மாமியாரும்; கோகுலன், கீர்த்திகா, தர்மினி, நிதர்ஷனன், ஜெயகரன், ஹரிகரன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 12- 8- 90 ஞாயிறு (இன்று) 2 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

9, முருகமூர்த்தி வீதி,
வண்ணார் பண்ணை, தகவல்:
யாழ்ப்பாணம். குமாரசிங்கம் குடும்பத்தினர்.
(13642)

## Dr. டேவிட் மான் யேசுதாசன்

(அதிபர்-மக்கள் மருத்துவமனை, பண்டாரவளை)

Dr. டேவிட் மான் யேசுதாசன் ஆவணி 2ஆம் திகதி காலமானார். அன்னார் சவுந்தரராணியின் அன்புக் கணவரும்; டிறேன், விமால், தமயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும்; காலஞ்சென்ற திரு, திருமதி ஜேகப் ராஜாமான் ஆகியோரின் அன்பு மகனும்; காலஞ்சென்ற திரு, சவுந்தரம் விலியம்ஸ், திருமதி விலியம்ஸ் இன் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் பூதவுடல் பண்டாரவளையில் 05-08-90 இல் நல்லடக்கம் செய்யப்பட்டது,

தகவல்:
எஸ். ஏ. மான்

உடுவில். [14023]

## திருமதி சின்னத்தம்பி பொன்னம்மா

இலுப்பைக்கடவையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னத்தம்பி பொன்னம்மா நேற்று[11-08-90] கைதடியில் காலமானார்.

அன்னார் வைரமுத்து சின்னத்தம்பியின் அன்பு மனைவியும்; திருமதி செல்லம்மா வடிவேல் (ஆசிரியை யாழ்/விக்கினேஸ்வரா, கைதடி], பேரின்பராசா (இ. போ. ச. மன்னார்), நாகராசா (கனடா), திருமதி வசந்தாதேவி தங்கராசா, திருமதி பராசக்தி பத்மராசா, மனோகரராசா (மூதூர்), யோகராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும்; திரு. வ. வடிவேல் (கைதடி), தேவிவிமலா (யாழ்ப்பாணம்), நாகலக்சுமி (இலுப்பைக்கடவை), தங்கராசா (அரசினர் வைத்தியசாலை, விடத்தல்தீவு), பத்மராசா (ஆசிரியர் ம. வி. கோப்பாய்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [12-08-90] இன்று காலை 10-00 மணிக்கு கைதடி மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. வடிவேல் (மருமகன்)

கைதடி. [14024]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org